விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 33 மாசி 15 [illegible] 11 இதழ்: 17
யாழ்ப்பாணம் புதன்கிழமை 27-2-1991

## குவைத்தில் நிலைகொண்டிருந்த ஈராக் படைகள் வாபஸ்

(பக்தாத்)

குவைத்திலிருந்து ஈராக் படைகள் நேற்று முதல் வாபஸ்பெறத் தொடங்கிவிட்டன.

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹூசைனின் உத்தரவின் பேரிலேயே இந்தப் படைகள் வாபஸ்பெறத் தொடங்கின. குவைத்திலிருந்து ஈராக்கிய துருப்புகளை உடனடியாக வாபஸ் பெறுமாறு ஜனாதிபதி சதாம் ஹூசைன் நேற்று உத்தரவிட்டார்.

வாபஸ் பற்றிய ஜனாதிபதியின் உரை நேற்று சுமார் 30 நிமிடங்கள் வரை பக்தாத் வானொலியில் ஒலிபரப்பப்பட்டது.

ஜனாதிபதியின் உரையைக் (4ம் பக்கம் பார்க்க)

## தமிழக கரையில் இந்திய கடற்படை

(சென்னை)

தமிழ்ப் போராளிகளின் நடமாட்டங்களைக் கட்டுப்படுத்த இராமேஸ்வரத்திலும், நாகபட்டினத்திலும் இந்திய கடற்படையினரின் இரு பிரிவுகள் நிறுத்தப்பட்டுள்ளன. (4ம் பக்கம் பார்க்க)

## ★ மன்னார் தள்ளாடி இராணுவ முகாமில்

# தடுத்து வைக்கப்பட்டிருந்த 60 தமிழர்கள் சுட்டுக் கொலை!

(நமது நிருபர் மு. ஈழத்தமிழ்மணி)

**மன்னார், தள்ளாடி பகுதியிலிருந்து இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த அறுபது தமிழ்ப் பொது மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

கடந்த வருடம் ஜூன் மாதம் மேற்குறிப்பிட்ட பகுதிகளிலிருந்து கைது செய்யப்பட்டவர்களில் அறுபது பொதுமக்கள் தள்ளாடி இராணுவ முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

ஆறுமாத காலமாக தள்ளாடி முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர்கள் ஜனவரி 10-ம் திகதிக்கு முன் கொலைப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் கைதான பின்னர் தள்ளாடி முகாமிற்குச் சென்ற உறவினர்கள் இவர்கள் பற்றி விசாரித்த பொழுது இராணுவத்தினர் எதுவித பதிலையும் அளிக்காமல் திருப்பி அனுப்பியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (56)

## பரீட்சைக்காக கொழும்பு செல்வது ஏற்க முடியாது

(யாழ்ப்பாணம்)

''போராளிகளுடைய பாதுகாப்பில் இந்த மண்ணில் வாழ்ந்துகொண்டு, பரீட்சை எழுத மட்டும் கொழும்பு செல்வது ஏற்றுக்கொள்ளமுடியாத ஒன்று'' என்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் நாயகம் திரு. யோகரத்தினம் யோகி தெரிவித்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## பச்சைப்புலிகள் கெடுபிடி திருமலையில் அதிகரிப்பு

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தில் பச்சைப்புலிகளின் கெடுபிடி அதிகரித்து வருகின்றது.

குடிமக்கள் வாழும் பகுதிகளுக்கு திடீரென வாகனத்தில் வரும் இவர்கள் பொது மக்களைக் கைது செய்து கொண்டு செல்கிறார்கள்.

கடந்த 22-ம் திகதி வெள்ளை நிறவாகனத்தில் வந்த பச்சைப் புலிகள் றஞ்சித், குட்டி

(4-ம் பக்கம் பார்க்க)

## அதிபர்கள் கொலையை கண்டித்து பாடசாலைகள் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

மன்னாரில் பாடசாலை அதிபர்கள், சிறிலங்கா இராணுவத்தினரால் கொலைப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மன்னார் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர்களும், மாணவர்களும் நேற்று முன்தினம் தொடக்கம் காலவரையின்றிப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

மன்னார் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் உட்பட இங்குள்ள அனைத்துப் பாடசாலை அதிபர்களின் ஆதரவுடன் இப்பகிஷ்கரிப்புப் போராட்டம் நடைபெற்றுவருகிறது.

அதிபர்களின் கொலை குறித்துத் தள்ளாடி இராணுவ முகாம் பொறுப்பதிகாரியின் சரியான பதில் கிடைக்கும் வரையும் இப்போராட்டத்தைத் தொடரப்போவதாகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் அறிவித்துள்ளனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## தனிச் சிங்களக் கடிதங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலை நிர்வாகத்திற்கு கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சிலிருந்து தனிச் சிங்களத்தில் சுற்றறிக்கைகளும் கடிதங்களும் வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

## பெண்கள் மீது இராணுவம் பாலியல் வன்முறை

(யாழ்ப்பாணம்)

மன்னாரில் மூன்று இளம் பெண்கள் இராணுவத்தினராலும், முஸ்லிம் ஊர்காவல் படையினராலும் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டனர்.

கடந்த 22-ந் திகதி இடம்பெற்ற இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பெண்கள் சிகிச்சை பெற முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (56)

## யுத்த விமானங்களை இந்தியா தயாரிக்கிறது

(புதுடில்லி)

இந்தியா தனது முதலாவது நவீனரக போர் விமான உற்பத்தியை இந்த நூற்றாண்டு முடிவுக்குள் தயாராக்கிவிடுமெனப் பிரதமர் திரு. சந்திரசேகர் பாராளுமன்றத்தில்

(4-ம் பக்கம் பார்க்க)

## 12,000 தொழுநோயாளர் இலங்கையில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

இலங்கையில் 12,000 தொழுநோயாளர்கள் இருப்பதாக சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் ஜோ பெரினண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடொன்றிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது:

''வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தற்பொழுது நிலவும் சூழ்

(4ம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவை களஞ்சியத்தில் பழுதான உணவுப் பொருட்கள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையிலுள்ள களஞ்சிய சாலையில் 15 மூடை கோதுமை மா, 5 மூடை அரிசி, 5 மூடை பருப்பு போன்ற உணவுப் பொருட்

(4-ம் பக்கம் பார்க்க)

## மட்டு. ஆசிரியர்களுக்கு கஷ்டப்பிரதேச நிவாரணம் வழங்கப்படவில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட ஆசிரியர்களுக்கு இதுவரையும் கஷ்டப்பிரதேச நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை.

இங்குள்ள ஏனைய திணைக்கள ஊழியர்களுக்கு இக்கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளபோதிலும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படாதது

(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## கலண்டர்கள், டயறிகள்

இவ்வாண்டுக்கான கலண்டர்கள், டயறிகள், பாடசாலை உபகரணங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். பூபாலசிங்கம் புத்தகசாலை, மின்சார நிலையவீதி, (பிறவுண்ஸ்கம்பெனி அருகில்) யாழ்ப்பாணம்.

(எ-1116)

## மீரா 25வது நாவல்

மீரா வெளியீட்டாளர்களின் இருபத்தி ஐந்தாவது பிரசுரமாக பிரசுரிப்பதற்கு சமகால நிகழ்வுகளை மையமாக கொண்ட நல்லதொரு நாவலை எழுத்தாளர்களிடம் இருந்து வரவேற்கிறோம்.

(சி 4390)

## WANTED

Female English Short-Hand Typist call personaly on week days 9-00 a.m To 11.00 a m. Fudo, 39/17, Powei House Road, 3rd, Lane Jaffna. (C-4393)

## வகுப்புகள்

G. S. Q (Bio) வகுப்புக்கள் எதிர்வரும் சனிக்கிழமை (02-03-91) ஆரம்பமாகவுள்ளன. சேர விரும்புவோர் தவறாது சமூகம் தரவும் அத்துடன் Shorthand & Type writting, Home Science Diploma வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன. தொடர்பு கொள்ளவும்: அதிபர் உயர் கல்விக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(சி 4396)

## ஜோதிடம்

ஜோதிடத்தின் திறமையையும் பயனையும் அறிய விரும்புபவர்கள் சந்திக்கலாம் அனுபவம்மிக்க முதிர்ந்த ஜோதிடர் ஆயரியாடி மயில்வாகனம் (300 ரூ / ஜா). ஜோதிட நவீன ஆய்வு நிபுணர் ஆயரியாடி ராமகிருஷ்ணன் (500 ரூ / ஜா). பலன்கள் கணிதத்துடன் விபரமாக எழுத்துமூலம் தரப்படும். யாழ்ப்பாணம், நாச்சிமார் கோவிலடி, சிவப்பிரகாசம் வீதிவழியாக இல. 52, கோவில் பிள்ளையார் வடக்கு ஒழுங்கை.

(சி-4397)

## தவறிவிட்டது

நாவற்குழி-கேரதீவு பாதையில் உடுபிடவை, பேர்ஸ், அடையாள அட்டை முக்கியமான கடிதங்கள் அடங்கிய நீலநிற பாக் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். A, மரிடசிலன், கேணிக்கட்டு லேன், பண்டத்தரிப்பு.

(சி-4399)

## சைக்கிளோடு மோதி காயம்

(புங்குடுதீவு)

அராலித்துறைப் பக்கமாக தாழப்பறந்து வந்த ஹெலிகொப்டரைக்கண்டு ஓடிய குடும்பஸ்தர் ஒருவர் பாரத்துடன் வந்த சைக்கிளுடன் மோதியதால் படுகாயமடைந்துள்ளார்.

புங்குடுதீவு பத்தாம் வட்டாரத்தைச் சேர்ந்த க. விசயன் என்பவரே காயமடைந்தவராவார். (101)

## கோட் சூட்

திருமண கோட், சூட், வேஸ்ட் கோட் யாவும் எமது கைதேர்ந்த மாஸ்டர் கட்டரால் தற்கால நாகரீகத்துக்கு ஏற்றமுறையில் தைத்துத் தரப்படும் ஜெயபதி சாம் செக்ஸ், அந்தோனியார் கோவிலடி, மானிப்பாய்.

(சி 4401)

## மினி பஸ் விற்பனைக்கு

எனது மினி பஸ் எம் மொடல் 29 சிறி 8646 விற்பனைக்கு உண்டு. க. சதிர சமநாதன், 381/1, யாழ்ப்பாண றோட், மானிப்பாய்.

(சி 4402)

## மார்ச் 7-க்கு முன் இலவச உல உணவுவழங்கவேண்டும்

(யாழ்ப்பாணம்) கட்ட இலவச உலர் உணவு யாழ். மாவட்டத்தில் இவ் விநியோகத்தை மார்ச்மாதம் வாண்டுக்கான முதலாம் (4-ம் பக்கம் பார்க்க)

## அறிவித்தல்

யாழ். மாவட்ட புடவை நெசவாளர்
கூட்டுறவுச் சங்கம்
அங்கத்தவர்களைச் சேர்த்தலும் சங்கத்திற்கான
கிளைத் தேர்தல்களை நடாத்துதலும்
1991.

மேற்படி சங்கத்தின் அங்கத்துவ இடாப்பு 31-3-1991 உடன் முடிவடையச் செய்யப்பட்டு கிளைக்குழுத் தேர்தல்கள் நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது இத் தேர்தலில் தகுதியான அங்கத்தவர்கள் மட்டுமே பங்குபற்ற முடியுமாதலால், ஒரு பங்கின் பெறுமதியான ரூபா 25/- ஐ மேற்படி திகதிக்கு முன்னர் சங்கத்திற் செலுத்தி உரிய உறுப்புரிமைப் பத்திரங்களை முறைப்படிநிரப்பி அங்கத்தவராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஏற்கனவே உறுப்பினராகச் சேர்ந்து பங்குப்பணம் தவணை தப்பியவர்களும் மீதிப்பணத்தைச் செலுத்தி அங்கத்துவத்தை உறுதிப்படுத்த வேண்டும். இது சம்பந்தமாக மேலும் விபரங்கள் தேவைப்படுவோர் கோண்டாவில் இருபாலை வீதியிலுள்ள சங்கத் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

செயலாளர்.

யாழ். மாவட்ட புடவை நெசவாளர்
கூட்டுறவுச் சங்கம்.
இருபாலை வீதி. கோண்டாவில் (ஏ 4389)


## கட்டட ஒப்பந்தக்காரர்களுக்கு விசேட அறிவித்தல்

ICTAD ல் பதிவு செய்ய விரும்பும் கட்டிட ஒப்பந்தக்காரர்கள் உடனடியாக எங்கள் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

செயலாளர்

வடமாகாண ஒப்பந்தகாரர் சங்கம்,
15, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம். (ஏ 1119)

## 7-வது ஆண்டு நினைவஞ்சலி ★ 6-வது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
சின்னத்தம்பி நடராஜா



அமரர்
நடராஜா சிவகாமிப்பிள்ளை

எங்கள் அன்புத் தெய்வங்களுக்கு எம் இதய அஞ்சலி
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

392/1 கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (சி-4394)

## ஓராண்டு நினைவஞ்சலி



சு. ஜெயக்குமார்
(ஜெயம்)
(காலஞ்சென்ற சுந்தரம் ஆச்சாரியின் மகன்)

தோற்றம்: 31-5-1953 மறைவு: 24-2-1990
திதி: 27-02-1991

மாதங்கள் உருண்டோடி வருடமாய் மாறினும்
மாறுதே எம்சோகம் உங்களை விட்டென்றுமே
மரணத்தால் உங்களை மாற்றிடினும்
சோகத்தால் எம்மை வருத்திடினும்
அன்பினால் உங்களைப் பார்க்க முடியவில்லையே!

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
தாய், மனைவி, மகன், சகோதரர்கள்,
சகோதரிகள், மைத்துனர்மார்,
மைத்துனி, மருமக்கள்.

''நாதன் வாசம்''
உப்புக்குளம் வீதி,
ஊர்காவற்றுறை. (சி 4395)

# வணக்கஸ்தலங்களை அழிக்கும் அரசின் கலாசார யுத்தம்!

## தமிழின அழிப்பு இவ்வாறும் தொடர்கிறது

(நேற்றைய தொடர்ச்சி)

பல்வேறு வழிகளில் தமிழ் மக்களது பொருளாதாரத்தை எவ்வளவு சரியச் செய்ய முடியுமோ அவ்வளவு முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளுகின்றது. இதன் தாக்கம் இன்று பரவலாய் எதிரொலிக்கத்தான் செய்கிறது! காலத்திற்குக்காலம் பொருட்களுக்கு செயற்கைத்தட்டுப்பாடு நிலவுவதுடன் பொருட்களின் விலையும் பன்மடங்கு உயர்ந்துள்ளது.

மருந்துப் பொருட்களின் தட்டுப்பாட்டினால் பெருமளவு உயிரிழப்புக்கள் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் காணப்படுகிறது. அத்துடன் தடுப்பு மருந்துகள் பலவும் இல்லாதகாரணத்தால் அநியாய உயிரிழப்புகள் தவிர்க்க முடியாதவையாயுள்ளன. எத்தனையோ நோயாளிகள் மருந்துகளின்மையால் நோயுடன் போராடிக்கொண்டிருக்கிறார்கள்.

எனவே பொருளாதாரத் தடைமூலமும், பொருளாதாரச் சீரழிப்பு மூலமும் தமிழ் மக்களது பொருளாதாரத்தை நசுக்கும் பொருளாதார யுத்தத்தை தமிழ்மக்கள் மீது ஸ்ரீலங்கா அரசு பிரயோகிக்கின்றது.

### எஸ். எஸ். குமரன்

### கலாசார யுத்தம்

தமிழ்மக்கள் மீது அரசினின்றும் இன்னொரு வகையான யுத்த முறையே கலாசார யுத்தமாகும். தமிழ் மக்களுடைய கலாசாரத்தை பண்பாட்டு விழுமியங்களை அழித்தொழித்தல் அல்லது பலவீனமடையச் செய்தல் என்பதுதான் இந்த யுத்தத்தின் நோக்கமாகும். பொதுவாகத் தமிழ் மக்கள் இந்து, கிறீஸ்தவ மதத்தினராகக் காணப்படுகின்றனர். இவர்களின் வணக்க ஸ்தலங்கள் அரச படைகளாலும் துணைக் கருவிகளாலும் அழிக்கப்படுகின்றன. அதுதவிர, இந்துக்கள், தமது வழிபாட்டில் பயன்படுத்தும் கற்பூரத்தையும், கிறீஸ்தவர்கள் தமது வழிபாட்டில் பயன்படுத்தும் மெழுகுவர்த்தியையும் இங்கே எடுத்துவர இராணுவத்தினர் தடைசெய்துள்ளனர். இதன் மூலம் தமிழ் மக்களின் மத அநுட்டானங்களைத் தடை செய்கிறது.

தமிழ் மக்கள் தமது கலாசார விழாக்களிலும் சடங்குகளிலும் பயன்படுத்தும் பொருட்கள் பலவற்றிற்கு இங்கு கொண்டுவரக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்களின் பாரம்பரியக் கலை மரபுகளை இங்கே நிலைபெறச் செய்ய முடியாத நிலையையும் இராணுவம் ஏற்படுத்தியுள்ளது. தமிழ் மக்களால் உள்நாட்டு வெளிநாட்டுச் சஞ்சிகைகளையோ, நூல்களையோ பார்க்கமுடியாதுள்ளது வெளியீட்டு நூல்கள், சஞ்சிகைகளை இங்கு எடுத்துவரமுடியாதுள்ளது. உள்நாட்டில் இவற்றை ஆக்குவதற்கு கடதாசித் தட்டுப்பாடு எரிபொருள் தட்டுப்பாடு போன்ற இன்னோரன்ன காரணிகள் தடையாய் உள்ளன. அரசு கடதாசியை இங்கு அனுப்ப மறுத்துவருகிறது. அதனுடன் அப்பியாசக் கொப்பிகள் அனுப்பாது மாணவரின் கல்வியைப் பாழடையச் செய்கிறது.

வானொலி, தொலைக்காட்சி என்பவற்றை உபயோகிக்க மின்சாரமில்லை. மின்கலங்களை எடுத்துவரவும் தடை. உலக நடப்புகளையோ உள்ளூர்ச் செய்திகளையோ அறிய முடியாத நிலை. இதைவிட 'தமிழ் மக்களின் குரல்' ஒலிபரப்பு அரச ஆதரவுடன் நடத்தப்படுகிறது. இதில் ஒலிபரப்பப்படும் பாடல்கள் அனைத்தும் கிளர்ச்சியூட்டக்கூடிய மக்களின் உணர்வுகளை மலினப்படுத்தும் காமரசப் பாடல்களே இவற்றை ஒலிபரப்புவதன் மூலம் தமிழ் மக்களது உணர்வுகளைப் பலவீனமாக்கி அவர்களது கலாசார தைசிதைக்க அரசு நினைக்கிறது.

இது தவிர மக்களின் உணர்வுகளை மயக்கச் செய்யும் போதைவஸ்துப் பாவனையை இங்கு புகுத்தி அதன்மூலம் தமிழினத்தை இழிந்த ஒரு சமுதாயமாக்கவும் முயல்கிறது.

இதைவிட மருந்து வகைகளில் உயர்செறிவில் மதுசாரம் கலந்து விநியோகிக்கப்படுகிறது. கைது செய்யப்படுபவர்கள் கருத்தடை செய்யப்படுகிறார்கள். பாலமா முதலியவற்றில் கருத்தடை மருந்துகள் செலுத்தப்படுகிறது இதன் மூலம் தமிழ் மக்களின் குடிசனத்தொகையை குறைக்க அரசு முயல்கிறது சிங்கள-தமிழ் மக்கள் வாழுகின்ற பிரதேசங்களில் தமிழர்களைச் சிங்களவராக்க அல்லது அவர்களை அவ்விடங்களைவிட்டு வெளியேறச் செய்கிறது.

மொத்தத்தில் பார்க்கும் போது தமிழின அழிப்பு பல்வேறுபட்ட வகைகளில் வடிவங்களில் நடைபெறுகின்றது. இவற்றில் இருந்து நாம் மீளுமாறும் முனைப்பான செயற்பாடுகளை எடுக்கவேண்டியது அத்தியாவசியமாகும்.

## வானொலிக் கருவி திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை வெளி நோயாளர் பகுதி மேல்மாடியில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் கடமையாற்றும் அலுவலகத்தில் இருந்து விலையுயர்ந்த வானொலிக் கருவி ஒன்று திருடப்பட்டுள்ளது.

ஆஸ்பத்திரி வளவில் நடமாடுபவர்களால் இக்கருவி திருடப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. (76)

## விலைப்பட்டியல் வைக்கவேண்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர வர்த்தகர்கள் அத்தியாவசிய பொருட்களுக்கு மட்டுமல்ல சகல பொருட்களுக்கும் கடைகளில் உடனடியாக விலைப்பட்டியல்கள் தொங்கவிடப்படவேண்டும்.

இவ்வாறு யாழ் வர்த்தகர் சங்க செயலாளர் திரு நமசிவாயம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் யாழ் வர்த்தகர்கள் பதிவுசெய்யப்படாமலிருந்ததால் உடனடியாக விண்ணப்பபடிவங்களைப் பெற்று மார்ச் 15-ம் தேதிக்கு முன் விண்ணப்பிக்க வேண்டும்'' என்றார். (152)

★ கொம்பியூட்டர் கல்வி

(COMPUTER PROGRAMMING BASIC)

60 மணித்தியால செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.

— காலம் 4 மாதம்.

ஆரம்பம் 1-3-1991 (கிழமை நாட்கள்)

3-3-1991 (சனி, ஞாயிறு)

★ DIPLOMA IN DRAUGHTSMANSHIP

— காலம் 6 மாதம்

(G. C. E. (O/L) சித்தியடைந்தவர்கள் அனுமதிக்கப்படுவர்)

ஆரம்பம் 2-3-1991

JAFFNA TECHNICAL INSTITUTE

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

(...யில்வே கடவை அருகாமை மேல்மாடி)

(ஏ 1118)

## 'தேப்பன்ரைன்' போத்தலில் கள் அருந்தியவர் பலி

(புங்குடுதீவு)

தேப்பன்ரைன் எண்ணெய் இருந்த போத்தலில் கள் வாங்கி பருகிய நபர் ஒருவர் மரணமானார்.

புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைச் சேர்ந்த கே. சதாசிவம் (வயது 55) என்பவரே இவ்வாறு மரணித்தவராவர்.

இவர் புங்குடுதீவு தனியார் மருத்துவமனை ஒன்றில் சேர்க்கப்பட்டு சிறிது நேரத்தின் பின் மரணமானார்.

இச்சம்பவம் கடந்த வாரம் புங்குடுதீவு மேற்கு ஊரித்தெரு என்னும் இடத்தில் நிகழ்ந்துள்ளது. (101)

## ஓய்வூதியர் பிரச்னை; சந்திக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ஓய்வூதியக்காரர்கள் தமது பிரச்சனைகள் சம்பந்தமாக யாழ். செயலகத்தில் ஓய்வூதியபிரதம எழுதுவினைஞர் அல்லது ஓய்வூதியக் கணக்காளர் அல்லது பிரதம கணக்காளர் ஆகிய மூவரில் ஒருவரை நேரடியாக சந்திப்பதற்கு தற்போது உரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

ஓய்வூதியக்காரர் நேர்முகச் சந்திப்புக்கான படிவத்தை பூரணப்படுத்தி மேற்படி அதிகாரிகளின் ஒருவரைச் சந்திப்பதன்மூலம் இலகுவாக தமது பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதன்மூலம் ஓய்வூதியக்காரர்களின் பிரச்சனைகள் துரித கெதியில் நிவாரணம் காணப்படவிருக்கிறது.

தற்போது நிலுவையாகவுள்ள ஜனவரி, பெப்ரவரி பென்சன் கொடுப்பனவுகளைத் துரிதப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் கொழும்பில் செய்யப்பட்டுவருகிறது. (153)

## விஞ்ஞான சங்கம் விரைவில் உதயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பிரதேசத்திற்கான 'விஞ்ஞான சங்கம்' ஒன்றை அமைப்பதில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஈடுபட்டுள்ளனர். இது கொழும்பிலுள்ள இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கம் போன்று இயக்கப்படவுள்ளது. இதற்கான யாப்பு விதிகள் தயாரிக்கப்பட்டுப் பூரணப்படுத்தப்பட்டுள்ளன. இந்த யாப்பு விதிகள் ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில் இச்சங்கம் இயங்க ஆரம்பிக்கும்.

இச்சங்கத்தின் முக்கிய குறிக்கோள்களாவன:- விஞ்ஞான ஆய்வுகளை விரிவடையச் செய்வது. இப்பிரதேசத்திற்குத் தகுந்தவாறு விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளைப் பரப்புவது. அவற்றைப் பிரயோகிப்பது, விஞ்ஞானக் கல்வி தொழில்நுட்பம் என்பவற்றை மேம்படுத்துவது ஆகியனவாகும்.

இச்சங்கத்தின் ஆரம்பக் கூட்டம் மார்ச் மாதம் 1-ம் திகதி பி. ப. 3 மணிக்கு யாழ் பல்கலைக்கழக பௌதீகவியல் விரிவுரை மண்டபத்தில்

(4ம் பக்கம் பார்க்க)

## இராசிபலன்

27-02-1991

புதன்கிழமை

மேடம்: நம்பிக்கையின்மை, கருத்து மோதல், பணக் கஷ்டம்.

இடபம்: பொதுப்பணி, அந்நியர் உதவி, தொழில் சிறப்பு.

மிதுனம்: அனுவசியத் தலையீடு. வீண் அலைச்சல், பணக்குறைவு.

கடகம்: குடும்ப சுகம், மன நிறைவு, சுபகாரியச் செலவு, பாராட்டு.

சிம்மம்: எதிர்பாராத தொல்லை, சகோதர பகை, அந்நியர் வாசம்.

கன்னி: கற்பனை, உடல் சோர்வு, தப்பபிப்பிராயம், குடும்பக் கவலை.

துலாம்: புதிய சிந்தனை, தொழில் லாபம். இனசன வருகை, புகழ்.

விருச்சிகம்: நரம்புப் பலவீனம், பழைய பகை, கருத்து மோதல்.

தனுசு: அதிக யோசனை, தவறான நடவடிக்கை, கடன் சுமை.

மகரம்: புத்திரர் உதவி, பயணம். தொழிலாளர் ஒத்துழைப்பு.

கும்பம்: அதிகாரிகள் பாராட்டு. குடும்ப உல்லாசம், நண்பருதவி.

மீனம்: தொழில் கஷ்டம் புதுப் பொருள் சேர்க்கை, பெண் தொல்லை.

ஜோஸ்யர்

## இன்று

(யாழ்ப்பாணம்)

மன்னாரில் இராணுவத்தால் நடாத்தப்பட்ட அதுபர்களின் படுகொலை குறித்து ஆராய்வதற்கான கூட்டம் இன்றுகாலை 11-00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு சகல பீடங்களையும் சேர்ந்த மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (வி)

## வர்த்தக சங்கம் அமைத்து உதவிய
# 19 பதுங்கு குழிகள்

(நாவற்குழி)

பொதுமக்களின் நலன்கருதி சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தகர் சங்கம், சாவகச்சேரி இலங்கை வங்கியிலிருந்து சங்கத்தானை இந்துக் கல்லூரி வரையிலும் 19 பதுங்குகுழிகளை அமைத்து உதவியுள்ளது.

இப்பணி, பொதுமக்களுக்கு மாபெரும் உதவியாக அமைந்துள்ளதெனப் பலர் கருத்துத் தெரிவித்தனர். (107)

### விஞ்ஞான

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறும் இக்கூட்டத்தில் பங்குகொள்வோர் ஆரம்ப உறுப்பினர்களாகக் கருதப்படுவர். அன்று புதிய உத்தியோகத்தர் தெரிவு நடைபெறவுள்ளது. உறுப்பினராகச் சேர்வதற்கான விண்ணப்பப்படிவம் விஞ்ஞான பீடத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியுமென அறிவிக்கப்படுகிறது.

### மார்ச் 7-க்கு முன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

7ம் திகதி கால எல்லைக்குள் ப.நோ.கூ. சங்கங்கள் யாவும் வழங்கி முடிக்கவேண்டுமென்று யாழ். மேலதிக அரச அதிபர் திரு. க. சண்முகநாதன் பணித்துள்ளார்.

யாழ் அரசாங்க செயலகத்தில் நடைபெற்ற உணவு விநியோகம் சம்பந்தமான கூட்டத்தில் மேற்படி முடிவு எடுக்கப்பட்டது.

அடுத்த உணவு விநியோகம் சம்பந்தமான கூட்டம் மார்ச் மாதம் 8ம் திகதி யாழ் செயலகத்தில் நடைபெறவிருக்கிறது. (153)

## மூவர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட் இயக்கத்தைச் சேர்ந்த மூவர் இன்று இனந்தெரியோரால் சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புளொட்டைச் சேர்ந்த ஒருவரும், ஈ.பி.ஆர்.எல்.எவ்.வைச் சேர்ந்த இருவருமே இச்சம்பவத்தில் இறந்தவர்களாவார்கள்.

### செஞ்சிலுவை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் பழுதடைந்த நிலையில் காணப்படுகிறது.

பாதிக்கப்பட்டோர்களின் நிவாரண உதவிகளை துரிதப்படுத்தி செயல்பட்டிருந்தால் இவ் உணவுமூடைகள் பழுதடையும் நிலைக்கு வந்திருக்காதென செஞ்சிலுவைச் சங்க உத்தியோகத்தர் கவலையுடன் தெரிவித்தார். (56)

### 12,000 தமிழர்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலை காரணமாக இம்மகாணத்தில் உள்ள தொழுநோயாளர்களை அடையாளம் காண முடியாதிருப்பதுடன் அவர்களுக்கு வைத்திய சிகிச்சையளிக்கவும் முடியாதுள்ளது. (நி-153)

## வீர மரணம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 13ந் திகதி முல்லைத்தீவுப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்துடன் இடம்பெற்ற மோதலில் காயமடைந்து சிகிச்சைபெற்று வந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பாலேந்திரன் (குமாரசாமி பாலசுப்பிரமணியம், முள்ளியவளை) என்பவர் வீர மரணமடைந்தார்.

இவருக்குப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். (வி)

## நிவாரண கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி மானிப்பாய்க் கிளையில் மார்ச் மாதம் 2ந் திகதி சனிக்கிழமை, நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்படவிருக்கிறது.

பெரியவிளான் கிராமசேவை அலுவலர் பிரிவைச் சேர்ந்த 378 குடும்பங்களுக்கும், சுதுமலை கிராமசேவை அலுவலர் பிரிவைச் சேர்ந்த 52 குடும்பங்களுக்கும் தலா ரூபா 4 ஆயிரம் வங்கிக் கட்டளையாக மேற்படி வங்கியில் வழங்கப்படவிருக்கிறது. (153)

### யுத்த விமானங்களை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

இந்திய விஞ்ஞானிகள் இங்கு லேசர் ரக விமானங்களை உருவாக்கிவருகிறார்கள்.

எந்த ஒரு அச்சுறுத்தலையும் சமாளிக்கக்கூடிய விதத்தில் நாடு தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (இ)

### பச்சைப் புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிய இருவரைக் கைது செய்துள்ளனர்.

இந்த வாகனத்தில் வந்தவர்கள் தமிழில் சரளமாக உரையாடியதாக அறிந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (வி)

### தனிச் சிங்களக்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் ஊழியர்கள் சுற்றறிக்கைகளையும், கடிதங்களையும் சரியாக விளங்கிக் கொள்வதில் மிகக் கஷ்டப்படுகிறார்கள் என்று கவலை தெரிவிக்கப்படுகிறது. (153)

### மட்டு. ஆசிரியர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து கவலை தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட கல்வித் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டபோது வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சிலிருந்து இதற்கான நிதி ஒதுக்கீடு வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (153)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

"யாழ். உதைப்பந்தாட்ட லீக்"கின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளைக் காலை 9-30 மணிக்கு யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

மேற்படி கூட்டத்திற்கு முன்பு, காலஞ்சென்ற காரியதரிசி ஈ. கே. குமரையாவின் உருவப்படத் திறப்பு வைபவமும் நடைபெறும். (வி)

## பேராசிரியர் வித்தி புலமைப்பரிசில் நிதி

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் சு. வித்தியானந்தனைக் கௌரவிக்குமுகமாக, அவரது பெயரில் புலமைப் பரிசில் வழங்கும் திட்டத்தைச் செயற்படுத்த யாழ் பல்கலைக்கழகம் பெரும் முயற்சி எடுத்துவருகிறது.

பேராசிரியர் சு. வித்தியானந்தனின் மாணவர்கள், நண்பர்கள், அபிமானிகள் அனைவரும் முழு மனதுடன் பங்குகொண்டு மேற்படி புலமைப் பரிசில் நிதியத்தைக் கட்டியெழுப்ப முன்வரவேண்டும் என்று யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் அ. துரைராசா வேண்டுகோள் விடுத்துள்ளார். (மா)

### குவைத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சேட்ட ஈராக்கியர்கள் வீதிகளுக்கு வந்து மகிழ்ச்சிகொண்டாடினார்கள்.

ஜனாதிபதி சதாம் ஹூசெயினின் உத்தரவை அடுத்து குவைத்தில் நிலைகொண்டுள்ள ஈராக்கியப் படைகள் வாபஸ்பெறத் தொடங்கிவிட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈராக்கிய துருப்புகள் தமது ஆயுதங்கள், தளபாடங்கள் ஆகியவற்றைக் கைவிட்டுச் செல்வதாக சவுதிஅரேபியாவிலுள்ள கூட்டுப்படை அதிகாரி தெரிவித்துள்ளார்.

ஈராக்கிய அதிபரின் படைவாபஸ் பற்றிய அறிவிப்பு அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷிற்கு உத்தியோகபூர்வமாகக் கிடைக்கவில்லையென்றும் புஷ்ஷிடமிருந்து அறிவித்தல் வரும்வரை தமது தாக்குதல் தொடருமென அமெரிக்க இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையில் வளைகுடாவில் யுத்த நிறுத்தம் மேற்கொள்ளும் வகையில் ஐ.நா. பாதுகாப்புச்சபை உடனடியாகக் கூட்டப்படவேண்டுமென சோவியத் வெளியுறவு அமைச்சர் அலெக்ஸாந்தர் ஐ.நா. பாதுகாப்புச் சபையைக் கோரியுள்ளார்.

ஈராக்கின் படை வாபஸ் பற்றிய அறிவிப்பை பிரிட்டன் நுணுக்கமாக ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஈ-பூ)

### அதிபர்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### 30 பெண்கள் தடுத்துவைப்பு

இதேவேளை கடந்த 17ந் திகதிக்குப் பின்னர் மன்னார்ப் பகுதியில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டவர்களில் பாடசாலை மாணவிகளும், இளம் பெண்களும் அடங்கியுள்ளனர். இவர்களில் சுமார் 30 பெண்கள் தற்போது தள்ளாடி இராணுவ முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### முஸ்லிம் ஊர்காவல் படை

மன்னார் மாவட்டத்தில் முஸ்லிம் மக்கள் வாழ்ந்த கிராமங்களில், அக்கிராமத்தில் வசித்த முஸ்லிம் இளைஞர்களே ஊர்காவற்படையில் அங்கம் வகிக்கின்றனர்.

எருக்கலம்பிட்டி, பள்ளிமுனை, தாராபுரம் போன்ற பகுதிகளில் உள்ள முஸ்லிம் இளைஞர்களில் சுமார் ஆயிரம் பேர் வரையில் இராணுவத்திற்குத் துணையாகச் செயற்படுகின்றனர்.

இந்த இளைஞர்கள் மன்னாரில் பயிற்சி அளிக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு கத்தி, வாள், துப்பாக்கி போன்ற ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளன. நி-56

## ஏறாவூரில் புலிகள் தாக்குதல்

(மட்டுநகர்)

ஏறாவூரிலுள்ள ஊர்காவற்படையினரின் காவல் அரண் மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டதில் ஊர்காவற்படையினருக்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

மேற்படி தாக்குதலில் புலிகள் தரப்பில் லெப். விகடன் வீரமரணம் அடைந்தார். (வி)

## ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு, பலாலி இராணுவ முகாம்களிலிருந்து விடுதலைப்புலிகளின் காவல் அரண்களை நோக்கி இராணுவத்தினர் பலத்த ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டதாகக் கூறப்படுகிறது.

நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட இந்த ஷெல் தாக்குதலில் புலிகள் தரப்பிற்கு எதுவித சேதங்களும் ஏற்படவில்லையெனத் தெரியவந்துள்ளது. (வி)

### பரீட்சைக்காக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

'புலிகளின் குரல்' வானொலியில் நடத்தப்பட்ட கலந்துரையாடல் ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"பரீட்சைகள் நடத்தப்படவேண்டும் என்பதற்காகப் போராடவேண்டுமே தவிர, அதற்காக கொழும்பு சென்று பரீட்சை எழுதுவது பற்றிச் சிந்திக்கக்கூடாது.

"அரசாங்கம் பரீட்சை நடத்தாவிட்டால் நாங்களே பரீட்சை நடத்துமளவுக்குச் சிந்திக்கவேண்டும்.

"இதேபோலப் பதுங்கு குழிக்குள் இருந்துகொண்டு எப்படிப் பாடசாலைகளை நடத்தலாம் என்றும் நாம் சிந்திக்க வேண்டும்" என்றும் அவர் மேலும் கூறினார்.

### தமிழக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தஞ்சாவூர் கரையோரப் பகுதியையொட்டி ரிசேவ் பொலிஸ் படைப்பிரிவும் நிறுத்தப்பட்டுள்ளது. தமிழகத்தின் சகல கரையோரப் பகுதியிலும் குறிப்பாக தரையிறங்கும் பகுதிகள் எங்கும் பொலிஸ் படை நிறுத்தப்பட்டுள்ளன.

இத்தகவலை இத[illegible] காப்பு இணைய[illegible] லலித் விஜய[illegible] பாராளுமன்றி[illegible] துள்ளார்.

## மரண அறிவித்தல்

### செல்வி அ. பிலோமினா

செல்வி மி. அருளானந்தம் (பெரியதம்பி) பிலோமினா (ராசாத்தி) சென்ற 22-02-91இல் காலமானார்.

அன்னார் மயிலிட்டியைச்சேர்ந்த அருளானந்தம் ஞானபாக்கியம் தம்பதிகளின் அன்புமகளும், தேவரட்ணம் ரட்ணா (இத்தாலி), திருமதி தேவரஞ்சிதம் ஜீவா (நோர்வே), தேவதாஸ் செல்வராணி (நோர்வே), திருமதி ரேஸ் மரியராணி திருச்செல்வம் (மூளாய் தீவு), திருமதி யசிந்தா தேவராணி சுனில் (கொழும்பு), திருமதி அருளானந்தநாயகி யுவக்கின் (ஜேர்மனி), பிரான்சிஸ் (நோர்வே), அருள்ஞானசீலன் (நோர்வே), அருள்ஞானசீலி, அருள்மலா ஆகியோரின் அன்புச் சகோதரியும், றீஹன், றெனடைஷ், பிரபாகரன், ஜதூஷன் ஆகியோரின் பெரிய தாயாரும், றியானா, றிஷாந்தன், தேவகன்னா, தாஸ்கன்னா ஆகியோரின் பெரிய அத்தையுமாவரார்.

அன்னாரின் பூதவுடல் சென்ற 23-02-91 பி. ப. 4-30 மணியளவில் 4ம் கட்டையடி, ஆனைக்கோட்டையில் உள்ள திரு. சு. பெனிப்பாஸ் என்பவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு மானிப்பாய் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டதுஎன்பதனை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்: மி. அருளானந்தம்.

4ம் கட்டை,
ஆனைக்கோட்டை.

(கி-4398)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 88-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.